සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

| | | |
|---|---|---|
| නැටුම් (භරත) I<br>நாட்டியம் (பரதம்) I<br>Dancing (Baratha) I | 53 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>Two hours |

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(1), (2), (3), (4), (5)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** "ஹரி திரு மருகன்" என்ற பாடலடியில் குறிப்பிடப்படுபவர்
(1) பிரம்மா (2) விநாயகர் (3) முருகன் (4) சிவன் (5) குபேரன்

**2.** பரத நடன உருப்படிகளில் இடம்பெறும் தீர்மானங்கள் போன்று கூத்தில் இடம்பெறுவது
(1) சொற்கட்டு (2) ஜதி (3) கோர்வை (4) அறுதி (5) தரு

**3.** ; ; ; ; ;, தகததிங்கி/ணதொம் தகததிங்கிண/தொம் தகததிங்கிணதொம்//
மேற்கூறிய தாளாங்கத்தில் அமையக்கூடிய ததிங்கிணதொம் அடவின் ஜாதி
(1) திஸ்ரம் (2) சதுஸ்ரம் (3) கண்டம்
(4) மிஸ்ரம் (5) சங்கீர்ணம்

**4.** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கரணங்களின் கோவை எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
(1) அங்ககாரங்கள் (2) குட்டிக்கரணம் (3) ஸ்தானம்
(4) சாரி (5) நிருத்தஹஸ்தம்

**5.** கீதம், வாத்தியம், நிருத்தியம் என்பன எவ்வாறு அழைக்கப்படுகின்றன ?
(1) தௌரியத் திரிகம் (2) மூவிசை (3) திரிகடுகம்
(4) திரிபுரம் (5) திரிவேணி

**6.** இந்திரனை அபிநயிக்கப் பொருத்தமான பாதபேதம்
(1) ஐந்த்ரம் (2) ஸ்வஸ்திகம் (3) மோடிதம்
(4) ஏகபாதம் (5) சமபாதம்

**7.** பதவர்ணங்களின் உத்தராங்கப் பகுதியில் அடங்குபவை
(1) பல்லவி, சரணம் (2) அனுபல்லவி, சரணம் (3) சரணம், சரணஸ்வரம்
(4) முக்தாய்ஸ்வரம், சரணம் (5) அனுபல்லவி, முக்தாய்ஸ்வரம்

**8.** அஷ்டபதி என்ற பரத நாட்டிய உருப்படியின் பரமாத்மா
(1) விஷ்ணு (2) பிரம்மா (3) சிவன்
(4) கணபதி (5) முருகன்

**9.** உலக நடன தினம் கொண்டாடப்படும் நாள்
(1) ஜனவரி 01 (2) பெப்ரவரி 14 (3) மார்ச் 30
(4) ஏப்ரல் 29 (5) யூன் 30

**10.** பரத சாஸ்திரத்தில் ஆறாவது அத்தியாயம் பின்வருவனவற்றில் எதனைப் பற்றி கூறுகின்றது ?
(1) அரங்க அமைப்பு (2) நடனத்தின் பயன் (3) கரணங்கள்
(4) நடனத்தின் தோற்றம் (5) ரஸங்கள்

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

11. சங்கீத அளவுகோல் எனக் குறிப்பிடப்படும் வாத்தியம்
(1) புல்லாங்குழல் (2) மிருதங்கம் (3) வயலின்
(4) யாழ் (5) வீணை

12. சப்ரகமுவ நடன சம்பிரதாயத்தில் கிராமியப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு உருவானது
(1) முல் மாத்ரய (2) சிந்து மாத்ரய (3) பட்டுதல் மாத்ரய
(4) யக்பத மாத்ரய (5) யாதினி மாத்ரய

13. திருக்குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடநாதர் வலம்வரும்போது அவரைக் கண்டு காதல் கொள்ளும் நாயகி
(1) வள்ளி (2) வசந்தவல்லி (3) ராதை (4) ரதி (5) சீதை

14. மராட்டிய மன்னர் காலத்தில் சங்கீத மஹால் என அழைக்கப்பட்டது
(1) நாட்டியசாலை (2) மண்டபம் (3) அரங்கு
(4) களரி (5) மேடை

15. ஸ்ரோதோவக யதியின் மறுபெயர்
(1) பர்வத யதி (2) டமருக யதி (3) மிருதங்க யதி (4) சம யதி (5) விஷம யதி

16. குச்சிப்புடி நடனத்தின் இன்றைய வடிவத்தை அமைத்தவர்
(1) சித்தேந்திர யோகி (2) ததே பள்ளி பேரையா சாஸ்திரி
(3) வேம்படி சின்ன சத்தியம் (4) வேதாந்தம் லக்ஷ்மி நாராயண சாஸ்திரி
(5) ஹரி மாதவையா

17. சிலப்பதிகாரத்தில் பொதுவியல் சார்ந்த ஆடல்களில் ஒன்றாகக் கருதப்படுவது
(1) பாண்டுரங்கம் (2) கொடுகொட்டி (3) ஆய்ச்சியர்குரவை
(4) பேடிக்கூத்து (5) குடக்கூத்து

18. கண்டஜாதி அடதாளம் மிஸ்ர கதியுடன் சேரும்போது வரும் தாளம் எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை
(1) 90 (2) 98 (3) 108 (4) 126 (5) 162

19. முகவீணை ஒரு
(1) நரம்புக்கருவி (2) தோற்கருவி (3) கஞ்சற்கருவி
(4) துளைக்கருவி (5) தாளக்கருவி

20. கதகளி ஆடலின் ஒப்பனைக் கலைஞர் எவ்வாறு அழைக்கப்படுகிறார் ?
(1) கட்டியக்காரன் (2) சௌட்டிக்காரன் (3) அண்ணாவியார்
(4) நட்டுவனார் (5) பக்கப்பாட்டுக்காரர்

21. சாந்தி நிகேதன் என்ற கலைக்கூடத்தை நிறுவியவர்
(1) ஈ. கிருஷ்ணய்யர் (2) ரவீந்திரநாத் தாகூர் (3) காளிதாசர்
(4) தஞ்சை பொன்னையாபிள்ளை (5) கௌரி அம்மாள்

22. அரங்கில் ஆற்றுகையாளரின் மகிழ்வான மனநிலையை வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுவது
(1) பரப்பொளி (2) கீற்று ஒளி (3) மங்கலான ஒளி
(4) குவிந்த ஒளி (5) பிரகாசமான ஒளி

23. வருத்தம் துளியும் இன்றி இருக்கும் மனத்தின் செயலை உணர்த்தும் விருத்தி/விருத்திகள்
(1) ஆரபடி விருத்தி (2) சாத்வதி விருத்தி (3) பாரதி விருத்தி
(4) கைசிசி விருத்தி (5) ஆரபடி விருத்தி, பாரதி விருத்தி

24. சிலப்பதிகாரத்தில் அரங்கத்தின் திரையைக் குறிக்கும் சொல்
(1) அரங்கு (2) தட்டி (3) சேலை
(4) எழினி (5) காட்சித்திரை

25. “ஸரிக கொங்கு...” என்ற ஜாவளி அமைந்துள்ள இராகம்
(1) மோகனம் (2) கானடா (3) கல்யாணி (4) சுருட்டி (5) ஆரபி

26. “வாரணம் ஆயிரம் சூழ...” என்ற பாடலில் வாரணம் என்பது
(1) மயில் (2) யானை (3) எருது (4) அன்னம் (5) குயில்

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**27.** தியாகராஜசுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளுக்கு நடன அமைப்புச் செய்து புகழ்பெற்றவர்
(1) வழுவூர் இராமையாபிள்ளை (2) அபிநய அரசி பாலசரஸ்வதி
(3) கலைமாமணி ருக்மணி அருண்டேல் (4) பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
(5) கங்கைமுத்து நட்டுவனார்

**28.** அரச சபையில் நடனம் ஆடியவர்களைப் 'பாஹரர், காவண்யர்' என அழைத்த நடன மரபு
(1) மோகினி ஆட்டம் (2) மணிப்புரி (3) ஒடிசி
(4) கதக் (5) கதகளி

**29.** "நல்ல சகுனம் நோக்கிச் சொல்லடி..." என்ற பதத்தின் சாகித்திய கர்த்தா
(1) மகாகவி சுப்பிரமணிய பாரதியார் (2) இயலிசைவாரிதி வீரமணி ஐயர்
(3) கவிஞர் முருகையன் (4) கவிப்பேரரசு வைரமுத்து
(5) கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

**30.** கந்துக நிருத்தம் காணப்படும் ஆடல் வடிவம்
(1) பரத நாட்டியம் (2) மணிப்புரி (3) மோகினி ஆட்டம்
(4) ஒடிசி (5) குச்சிப்புடி

**31.** இராமநாதன் நுண்கலைக் கழகத்தை திறந்து வைத்தவர்
(1) திரு. ரி. எம். நாராயண சுவாமிப் பிள்ளை
(2) சங்கீத கலாநிதி மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர்
(3) பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி
(4) மகாராஜபுரம் வி. சந்தானம்
(5) பேராசிரியர் சந்தியாவந்தனம் சீனிவாச ஐயர்

**32.** பழந்தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் அகப்பொருள் செய்திகளைக் கொண்ட உருப்படி
(1) கீர்த்தனை (2) பதம் (3) தில்லானா
(4) அலாரிப்பு (5) புஷ்பாஞ்சலி

**33.** கலைகளிலும் சாஸ்திரங்களிலும் ஆர்வம்மிக்க நாயகன்
(1) ஸ்ரீ இராமர் (2) இராவணன் (3) ஸ்ரீ கிருஷ்ணர்
(4) புத்தர் (5) துரியோதனன்

**34.** "தோயும் திதி அமைப்பில்..." என்று உண்மை விளக்கத்தில் குறிப்பிடப்படும் நடராஜபெருமானின் திரு அங்கம்
(1) தூக்கிய திருவடி (2) ஊன்றிய திருவடி (3) இடதுவரத கரம்
(4) உடுக்கை ஏந்திய கரம் (5) வலது அபய கரம்

**35.** இறை புகழைக் கவிச் சொற்கட்டுகளில் அமைத்து அபிநயிக்கும் நடன உருப்படி
(1) அலாரிப்பு (2) ஜதிஸ்வரம் (3) கவுத்துவம்
(4) ஜாவளி (5) தில்லானா

**36.** ஆலய வழிபாட்டில் "ஷோடசோபசாரம்" எனக் கூறப்படும் வழிபாட்டு முறையில் 14ஆவது அங்கம்
(1) கீதவாத்தியம் (2) தீபாராதனை (3) நிருத்தியம்
(4) பண்ணிசை (5) வேதஉச்சாடனம்

**37.** நாட்டியமாடுபவர் பாடலைத் தானே பாடிக்கொண்டு அபிநயித்தல்
(1) உபசப்த வாச்சிகம் (2) உபகீத வாச்சிகம் (3) சுகித வாச்சிகம்
(4) சுசப்த வாச்சிகம் (5) கீத வாச்சிகம்

**38.** சௌக்ககாலத்தில் அமைந்திருக்கக்கூடிய உருப்படிகள்
(1) அலாரிப்பு, சப்தம் (2) கவுத்துவம், தில்லானா (3) பதம், கீர்த்தனம்
(4) வர்ணம், ஜதிஸ்வரம் (5) அலாரிப்பு, ஜதிஸ்வரம்

**39.** நால்வகை அபிநயங்களில் 'ஆங்கிகம்' என்பதன் மறு பெயர்
(1) தஞ்சாயி (2) அனுசாயி (3) விபசாயி
(4) அபிநயம் (5) சாயி

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

40. உடுக்கு வாத்தியத்தில் துணியை நெகிழ்த்தியும் இறுக்கியும் பிடிப்பதற்கான காரணம்
(1) அழகூட்டுவதற்கு
(2) விழாமல் இருப்பதற்கு
(3) நடை வேறுபாட்டைக் காட்டுவதற்கு
(4) ஓசை ஓங்கியும் தாழ்ந்தும் ஒலிப்பதற்கு
(5) உடுக்கிலுள்ள துளைகளை மூடுவதற்கு

41. தியான ஸ்லோகமான 'ஆங்கிகம் புவனம்...' என ஆரம்பமாகும் நூல்
(1) அபிநயதர்ப்பணம் (2) நடனக்கலை (3) நாட்டியக்கலை
(4) அபிநய சாரசம்புடம் (5) பரதக்கலை

42. தான வீரனுக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியவர்
(1) மகேந்திரவர்மன் (2) அர்ச்சுனன் (3) சிபிச்சக்கரவர்த்தி
(4) தசரதன் (5) கர்ணன்

43. ஆடல் அமைப்பில் பெண்ணை அடையாளம் காட்டப் பிரயோகிக்கப்படும் ஹஸ்தம்
(1) டோலம் (2) சுவஸ்திகம் (3) கடகாவர்த்தனம்
(4) அவகித்தம் (5) கீலகம்

44. "பகுத்தறிவு எழுச்சி பெற அழகியற் கல்வி ஒரு நிபந்தனையாகும்" எனக் கூறியவர்
(1) ரூசோ (2) லெனின் (3) மகாத்மா காந்தி
(4) கார்ல் மாக்ஸ் (5) ஷேக்ஸ்பியர்

45. பிண்டி என்பது
(1) அபிநயச் செய்கை (2) இரட்டைக்கைச் செய்கை (3) எழிற்கைச் செய்கை
(4) தொழிற்கைச் செய்கை (5) ஒற்றைக்கைச் செய்கை

46. நடனத்தினை 'குனிப்பு' என அழைத்த இலக்கிய காலம்
(1) சங்ககாலம் (2) சங்கமருவிய காலம் (3) சோழர் காலம்
(4) பல்லவர் காலம் (5) நாயக்கர் காலம்

47. அசோக வனத்தில் சிறையிருந்த சீதையை அனுமன் கண்டபோது சீதைக்கு ஏற்பட்ட ரஸ வெளிப்பாடுகள்
(1) பயம், அற்புதம் (2) ஹாஸ்யம், வீரம் (3) சாந்தம், வீரம்
(4) பீபத்ஸம், அற்புதம் (5) கருணை, வீரம்

48. குரவைக் கூத்தாடும் வேலன் தலையில் அணிந்ததாகக் கூறப்படுவது
(1) முல்லைப் பூ (2) மருக்கொழுந்து (3) கண்ணி
(4) சாமந்திப் பூ (5) ரோஜாப் பூ

49. "தையலே உனை நினைந்து நினைந்துருகித் தயங்குகிறார் அடி மானே...". இது யார், யாருக்குக் கூறுவதாக அமைந்துள்ளது ?
(1) தலைவன் தலைவிக்கு (2) தலைவி தோழிக்கு (3) தோழி தலைவிக்கு
(4) தலைவி தலைவனுக்கு (5) வளர்ப்புத்தாய் தலைவிக்கு

50. "ஏறுமயில் ஏறி விளையாடு முகமொன்றே" என்ற திருப்புகழில் குறிப்பிடப்படுவது
(1) ஆறுமுகத் தத்துவக் கருத்து
(2) வேலின் உட்பொருள்
(3) சேவற்கொடியின் கருத்து
(4) மயில் வாகனத்தின் சிறப்பு
(5) முருகப் பெருமானின் வீரம்

* * *

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

AL/2016/53/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2016 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2016 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2016

නැටුම් (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Baratha) II

53 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் முதலாம் வினா உட்பட **இரண்டு** வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றையும் இப்பதவர்ணத்தில் குறிப்பிடப்படும் நாயகன், நாயகி ஆகியோரையும் தருக. (04 புள்ளிகள்)
   (ii) இப்பதவர்ணத்தில் பல்லவி பகுதிக்குரிய தீர்மானம் ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (08 புள்ளிகள்)
   (iii) இப்பதவர்ணத்தின் பாடல் கருத்தினை எழுதுக. (08 புள்ளிகள்)

2. ஒடிசி நடனத்தினை பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
   (i) தோற்றம் (03 புள்ளிகள்)
   (ii) வளர்ச்சி (03 புள்ளிகள்)
   (iii) ஆடல்முறை (06 புள்ளிகள்)
   (iv) பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் (02 புள்ளிகள்)
   (v) ஆடை, அணிகலன்கள், ஒப்பனை (06 புள்ளிகள்)

3. (i) அஷ்டவித நாயகிகளைக் குறிப்பிடுக. (08 புள்ளிகள்)
   (ii) அஷ்டவித நாயகிகளின் குணவியல்புகளை விளக்குக. (12 புள்ளிகள்)

## பகுதி II

4. (i) ஆலயங்களில் சாஸ்திரிய நடனம், கிராமிய நடனம் என்பன எவ்வெவ் சந்தர்ப்பங்களில் நிகழ்த்தப்படுகின்றன ? (06 புள்ளிகள்)
   (ii) ஆலயங்களில் இவ்விருவகை நடனங்களையும் ஆற்றுகை செய்வதன் நோக்கங்களை உதாரணங்கள் மூலம் விளக்குக. (14 புள்ளிகள்)

5. சிறுகுறிப்பு எழுதுக.
   (i) சொக்கரி
   (ii) நட்டுவாங்கம்
   (iii) நிருத்தியம்
   (iv) ஒளிவிதானிப்பு (4 × 05 = 20 புள்ளிகள்)

6. வழுவூர் இராமையாப் பிள்ளை அவர்களது வாழ்க்கை வரலாற்றினையும் அவர் ஆடற்கலைக்கு ஆற்றிய பணிகளையும் எழுதுக. (20 புள்ளிகள்)

7. (i) சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பின்வரும் அம்சங்களை விளக்குக.
   (அ) தோற்றம் (ஆ) வளர்ச்சி (08 புள்ளிகள்)
   (ii) இந்நிறுவனம் பரதநாட்டியக் கலை வளர்ச்சிக்கு ஆற்றும் பங்கினை விரிவாக ஆராய்க. (12 புள்ளிகள்)

8. "பரதக் கலையைப் பயில்வதன் மூலம் அழகியல் உணர்வுகள், சமய, கலாசார விழுமியப் பண்புகள் விருத்திசெய்யப்படுகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. (20 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka